## டிசம்பர் – 15 – வெள்ளி

### புனித மெஸ்யின் மாக்குயின்

### நற்பேறு பெற்றவர் யார்? திபா. 1:1

### முதல் வாசகம் : ஏசாயா 48 : 17 - 19

இஸ்ரயேலின் தூயவரும் உன் மீட்பருமான ஆண்டவர் கூறுவது இதுவே் உன் கடவுளாகிய ஆண்டவர் நானே! பயனுள்ளவற்றை உனக்குக் கற்பிப்பவரும் செல்லவேண்டிய வழியில் உன்னை நடத்துபவரும் நானே! என் கட்டளைக்குச் செவிசாய்த் திருப்பாயானால், உன் நிறைவாழ்வு ஆற்றைப் போலும், உன் வெற்றி கடல் அலை போலும், பாய்ந்து வந்திருக்கும். உன் வழிமரபினர் மணல் அளவாயும், உன் வழித்தோன்றல்கள் கதிர்மணிகள் போன்றும் இருந்திருப்பர் அவர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டிரார் அவர்கள் பெயர் என் திருமுன்னின்று அழிக்கப்பட்டிராது.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம்மைப் பின்தொடர்பவர் வாழ்வின் ஒளியைக் கொண்டிருப்பர்.

### நற்செய்தி : மத்தேயு 11 : 16 - 19

அக்காலத்தில் இயேசு கூறியதாவது: ”இத்தலைமுறையினரை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் சந்தை வெளியில் உட்கார்ந்து மறு அணியினரைக் கூப்பிட்டு, ”நாங்கள் குழல் ஊதினோம் நீங்கள் கூத்தாடவில்லை. நாங்கள் ஒப்பாரி வைத்தோம் நீங்கள் மாரடித்துப் புலம்பவில்லை” என்று கூறி விளையாடும் சிறுபிள்ளைகளுக்கு ஒப்பானவர்கள். எப்படியெனில், யோவான் வந்தபோது அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. இவர்களோ ”அவன் பேய்பிடித்தவன்” என்கிறார்கள். மானிட மகன் வந்துள்ளார் அவர் உண்கிறார் குடிக்கிறார். இவர்களோ, ”இம் மனிதன் பெருந்தீனிக்காரன், குடிகாரன், வரி தண்டுபவர்களுக்கும் பாவிகளுக்கும் நண்பன்” என்கிறார்கள். எனினும் ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக் கொண்டோரின் செயல்களே சான்று” என்றார்

**தியானம்:** எம்மைப் படைத்த இறைவன் என்றும் மாறாவராக தான் விரும்பியதை எமது வாழ்வில் நிறைவேற்றுபவராக இருக்கின்றார். இறைவன் தனது வாக்குறுதிகளில் இருந்து மாறுவதுமில்லை, தவறுவதுமில்லை. அதுமட்டுமல்ல, இறைவன் கொடுத்த வாக்குறுதிகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதும் இல்லை என்று இன்றைய நற்செய்தி எமக்குப் படிப்பிக்கின்றது. நாம் ஒவ்வொரு வரும் பரலோக தகப்பனின் அன்புக் குழந்தைகள். எமது கஸ்ட துன்ப வேளைகளில் இறைவன் எம்மைக் கைவிடுவதுமில்லை, கை நெகிழுவதுமில்லை என எமக்கு வாக்குப் பண்ணியுள்ளார். நாம் எமது பரலோக தகப்பனுக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழுவோமாயின் இறைவன் என்றும் எம்மைக் கைவிடமாட்டார் என்பது நிட்சயம். எனினும், இன்றைய நற்செய்தியில் குறிப்பிடும் சிறுவர்கள் போன்று எம்மை வேறுவிதமாகவும் சிந்திக்கத் தூண்டலாம். “நாங்கள் குழல் ஊதினோம் நீங்கள் கூத்தாடவில்லை” நாங்கள் ஒப்பாரி வைத்தோம் நீங்கள் மாரடித்துப் புலம்பவில்லை” என நாம் இறைவல்லமையில் சந்தேகப்பட்டு, எமக்கு வாக்களித்த சுதந்திரத்தை அனுபவிக்க தவறிவிட்டோமா? என நம்மை வினாவலாம். இவை அனைத்திற்கும் ஒரே பதில் ஒளிவு மறைவு இன்றி எல்லாம் வல்ல இறை நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும் என்பதாகும். இதனையே “பயனள்ளவற்றை உனக்குக் கற்பிப்பவரும் செல்லவேண்டிய வழியில் உன்னை நடத்துபவரும் நானே” (ஏசாயா48:17-19) என தனது கட்டளைக்குச் செவிசாய்க்குமாறு வல்லவரான இறைவன் கூறுகின்றார். ஆதலால் இறைமகன் இயேசுவின் பிறப்பு விழாவிற்கு ஆயத்தம் செய்யும் நாம் ஒவ்வொருவரும் வார்த்தையே மனுவுருவானவரது வல்லமையில் நம்பிக்கை வைப்போம். இத்திருவருகைக் காலத்தில் நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து எம்மையும் உரிய முறையில் தயார் செய்வோம். தமது ஒரு சொல்லால் இவ்வுலகைப் படைத்தவர் எம்மையும் நிறைவாக வழிநடத்துவார் என விசுவசிப்போம்.